கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (மார்ச்/ஏப்ரல் 2019)

# HC/S 2113 Hinduism in India

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி–II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களிற்கு விடை தருக.

---

## பகுதி – I

01. "வட இந்திய இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் சிறப்புமிகுந்த காலமாகக் கொள்ளத்தக்கது குப்தர் காலமாகும்." இக்கூற்றினை மேல்வரும் தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

    (i) இலக்கிங்களும் நாணயங்களும் (07 புள்ளிகள்)
    (ii) கோயிலும் கலைகளும் (07 புள்ளிகள்)

02. "பண்டைத்தமிழரின் தாய்த் தெய்வமாகவும் போர்த்தெய்வமாகவும் கொள்ளத்தக்கவள் கொற்றவை" கொற்றவை வழிபாடு தொடர்பாக மேல்வரும் தலைப்புகளைப் பரிசீலனை செய்க.

    (i) வழிபாட்டு முறைகள் (07 புள்ளிகள்)
    (ii) பிரதிமா இலட்சணம் (07 புள்ளிகள்)

03. "சோழப் பெருவேந்தர் காலத்து சைவ சமயத்தின் சிறப்பம்சமாகக் கொள்ளத்தக்கது அடியார் வழிபாடு ஆகும்." அடியார் வழிபாட்டின் பிரசித்தம் புலப்படும் வகையில் மேல்வரும் தலைப்புகளை விளக்குக.

    (i) பெரிய புராணத் தோற்றமும் பொருள் மரபும் (07 புள்ளிகள்)
    (ii) கோயில்களில் சைவநாயன்மார்களது சிற்பங்களும் ஓவியங்களும் (07 புள்ளிகள்)

## பகுதி – II

04. வட இந்தியாவில் மௌரியப் பேரரசர்கால இந்துப் பண்பாட்டு அம்சங்கள் பற்றி கட்டுரை வரைக. (24 புள்ளிகள்)

05. இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் வழக்கிலுள்ள வழிபாட்டு மரபுகளுள் சூரிய வழிபாடு பிரசித்தமானது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (24 புள்ளிகள்)

06. "காரைக்கால் அம்மையாரின் பிரபந்தங்கள் காட்டும் காபாலிக சைவம்" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக. (24 புள்ளிகள்)

07. பாண்டியர் கால செப்பேடுகள் வாயிலாக அறியக்கிடைக்கும் தமிழ் நாட்டின் இந்துக் கலாசார அம்சங்கள் பற்றிய பதிவுகளை மதிப்பீடு செய்க. (24 புள்ளிகள்)

*****